பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை

# இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்..

எண் 24:1

செய்தி மலர்
2021
அக்டோபர்

இதழ் : 6
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகள், வாலிபர்கள், மற்றும் சிறுபிள்ளைகள் யாவருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் கர்த்தர்தாமே நம் ஒவ்வொருவரையும், சுகத்தோடும், பெலத்தோடும் காத்தார், எல்லா ஆராதனைகளிலும் கர்த்தரை மகிமைபடுத்த கிருபை செய்தார், சபை வீட்டில் இருந்த நெருக்கங்கள் மாறி இப்பொழுதும் விடுதலையோடு இங்கு ஆராதனை நடத்த கிருபை பாராட்டி இருக்கின்றார், கர்த்தர் நாமம் மகிமைபடுவதாக!

## திருப்தியான வாழ்க்கை

### "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்"(எண் 24:1) அவரது சித்தமுமாய் இருக்கிறது

நமது தேவனாகிய கர்த்தர் நம்மை எந்த நிலையிலும், எக்காலத்திலும், எல்லா தேவைகளிலும், வானத்தின் பலகணிகளை திறந்து, இடம் கொள்ளாமல் போகும் மட்டும் ஆசீர்வதித்து ஒரு சாட்சியுள்ள, சந்தோஷமான வாழ்க்கையை காண , திருப்த்தியான அநேக சூழ்நிலைகளை ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார். நாமும் எப்பொழுதும் மன ரம்மியமாக இருந்து, கர்த்தரை துதிக்க மறந்துவிட கூடாது. அவரது ஆசிர்வாதங்கள் நாம் வேண்டிக்கொண்டது போல அல்ல, அவரது சித்தத்தின்படி அளவில்லாமல் தருகிறார். அவர் அளந்து கொடுப்பவர் அல்ல! மாறாக அள்ளி கொடுப்பவர் அவற்றை பெற்றவர்களாய். கர்த்தருக்கு பிரியமான வாழ்க்கையை வாழ்ந்து. சாட்சியாய் திகழ்வோம்!.

நம்முடைய வாழ்க்கையிலும் கர்த்தர் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்கள், சிறியதென்றும், போதாது என்றும், குறைவுள்ளவைகள் என்றும், எண்ணி துக்கிக்காமல், வனாந்திரத்தில் இயேசு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேர்களை போஷித்து மீதமும் எடுக்க வைத்தார், என்பதை நினைவு கூர்ந்து நம்முடைய வாழ்வில் கர்த்தர் கொடுத்தவைகளை கர்த்தர் பாதத்தில் வைத்து அதை பலுகி, பெருக ஜெபிப்போம்!.

3 அவர் தமது கிருபையினால் திருப்த்தியாக்குகிற தேவன், மரியாள் எல்லா ஸ்திரீகளுக்குள்ளும், பெண்களுக்குள்ளும் கிருபை பெற்றாள், தேவதூதன் வாழ்த்தும் போதும் கிருபை பெற்றவளே என்று வாழ்த்தினான். நாமும் அவளை போல தாழ்மையுள்ளவர்களாய் இருக்கின்ற போது, கர்த்தர் கிருபையால் நிரப்புவார், திருப்த்தியாக்குவார், தாவீது போல நாமும் கர்த்தரிடத்தில் கேட்போம்.

நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உங்கள் கிருபையினால் திருப்த்தியாக்கும் ( சங் 90:14)

அவர் மகிமையினால் திருப்த்தியான தாவீது போல நாமும், அவரின் மகிமையால் நிரப்பப்பட்டு, மகிமையுள்ள ஆவியானவர்தாமே, நம்மோடு ஒவ்வொரு நாளும், இடைபட அவருக்கு இடம் கொடுக்க வேண்டும், சங்கீதம் 24:7ன் படி மகிமையின் ராஜா நமக்குள் உட்பிரவேசிப்பார்.

கர்த்தர் நமக்கு இந்த தேசத்தில் நல்ல பங்கை கொடுத்திருக்கிறார். ஆம் அதுதான் நமது அஹமதி தமிழ் திருச்சபை. ஆம் பிரியமான சகோதரனே, சகோதரியே, கர்த்தர் நம் யாவரையும் கன்மலை தேனினாலும், உச்சிதான கோதுமையினாலும் நம்மை போஷித்து வழி நடத்துகிறார். ஆதலால் நாம் யாவரும் சபை கூடுதலை விட்டுவிடாதபடி, சகோதரர்கள் ஒருமித்து வாசம் செய்து கர்த்தரை துதிப்போம், அவரின் ஆலயத்தின் நன்மையால் திருப்த்தியாவோம், உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிக்கும்படி நீர் தெரிந்து கொண்டு சேர்த்து கொள்கிறவன் பாக்கியவான், உமது பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டில் நன்மையால் திருப்த்தியாவோம். (சங் 65:4)

கர்த்தர்தாமே நம்மை ( வசனம்) ஆகாரத்தினாலும் திருப்த்தியாக்குவார். அநேக இடங்களில் சபை கூடு வருதல் தடைபட்டது. ஆராதனை நடத்த முடியாத சூழ்நிலைகள், ஆனாலும் நமக்கு எல்லா சூழ்நிலைகளையும் அனுகூலமாக மாற்றி வார்த்தையென்னும் மன்னாவால் திருப்த்தியாக்கி நடத்துகிறார். கையின் பிரயாசங்களை வர்த்திக்க பண்ணி நம்மடைய இல்லத்தில் எண்ணையும். மாவும், குறையாமல் காத்து போஷித்து நடத்தி வந்தார். அவர் உன் அப்பத்தையும்,தண்ணீரையும், ஆசிர்வதிப்பார், உன் கூடையும் மாபிசைகிற உன் தொட்டியும், ஆசீர்வதிக்கபட்டிருக்கும், ஆம் பிரியமானவர்களே அவர் நம்மை புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீரண்டை அழைத்து சென்று திருப்த்தியாக்குவார்.

வருகின்ற மாதத்தில் நடைபெற இருக்கிற எல்லா ஆராதனைகளிலும் கர்த்தரின் வல்லமை இறங்கி நம் சபையின் ஆத்துமாக்களை திருப்த்தியாக்கி நடத்திட ஜெபிப்போம்! கர்த்தர் அநேகருக்கு அளவில்லாத ஆசீர்வாதங்களை கொடுத்து நடத்தி வருகிறார். சுகத்தை கொடுத்திருக்கிறார். மீண்டும் இந்ததேசத்திற்கு அழைத்து வருகிறார், பிள்ளை செல்வங்களை

அருளியிருக்கிறார், அதற்காக நம் தனிப்பட்ட ஜெபங்களில் ஆண்டவருக்கு நன்றி சொல்லி ஜெபிப்போம். கர்த்தருக்குள் தாழ்மையை தரித்தவர்களாய்,கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிப்போம்

கர்த்தர்தாமே உங்கள் ஒவவொருவர்களையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக ! ஆமென் அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரர்
ஜெயசேகர்

(தேவ செய்தியின் 6 ஆம் பக்க தொடர்ச்சி )

4.எளியவர்களின் விண்ணபத்தை விண்ணபத்தை (சங் 69:33):- கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். ஆங்கில வேதாகம மொழி பெயர்ப்பில் "For the Lord heareth the poor" என்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது கர்த்தர் ஏழைகளின் விண்ணபப்பத்தை கேட்கிறார். தாவீது தன் அனுபவத்தில் கூறும்போது "இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு 'இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு அவனை அவன் இடுக்கண்களுக்குகெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்''' (சங் 34 அவனை அவன் இடுக்கண்களுக்கு கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்''' :6) என்றே கூறுகிறார். ஆகவே நான் ஏழை எளியவனாயிருக்கின்றேன் என்று நீங்கள் ஏங்க வேண்டாம். ஏனென்றால் உங்கள் அங்கலாய்ப்புகளை அறிந்திருக்கிறவர் உங்கள்: வேதனைகளை அறிந்திருக்கிறவர், உங்களுக்கு சமீபமாய் உங்கள் வேண்டுதல்களை கேட்க ஆவலாய் உள்ளார்.

5.சிறுமைப்பட்டவர்களின்வேண்டுதலை (சங்10 .சிறுமைப்பட்டவர்களின்வேண்டுதலை (சங்10:17):- கர்த்தாவே சிறுமைப் பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர். சிறுமைப்பட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார் (சங் 14:6). "சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை 'சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்''' (சங் 9 மறவார்''' :12). நம் தேவன் இயேசுவும் சிறுமைபட்டவரென்று எண்ணப்பட்டவரே (ஏசா 53:4). வேதத்தில் அன்னாளைக் குறித்து நாம் பார்க்கும்போது கர்த்தர் அவளு டைய சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து அவளுடைய வேண்டுதலைக் கேட்டு அவளுக்கு ஒரு ஆண் பிள்ளையை தந்தருளினார். ஆகவே நம் தேவன் நம் சிறு மையை கண்ணோக்குகிற தேவன். அன்னாளை சிறுமைப்படுத்த ஒரு பெனின்னாள் இருந்தது போல உங்களையும் தங்களின் வார்த்தைகளாலும், சொல்களாலும் சிறுமைப்படுத்த சிலரை தேவன் அனுமதித்தார். அப்படிப்பட்ட வேளைகளில் நீங்கள் சோர்ந்து போக வேண்டாம். நீங்களும் அன்னாளைப் போல உங்கள் இருதயத்தை தேவ சமூகத்தில் ஊற்றி ஜெபம் பண்ணுங்கள். தேவன் அன்னாளுக்கு தந்த ஆண் பிள்ளை என்பது உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் கர்த்தர் உங்களுக்கு தரப்போகிற ஜெயத்தை காண்பிக்கிறது. நீங்கள் உங்கள் சூழ்நிலைகளைப் பாராதபடி தேவனை நோக்கிப் பாருங்கள். ஜெயத்தை கொடுப்பவர் அவரே.

அன்பு தேவ ஜனமே! நம் ஜெப விண்ணப்பங்களைக் கவனமாய் கேட்டு பதில் செய்கிறவர் நம் அருகாமையில் அதரிசனமான தேவனாய் நம்மோடு கூடவே இம்மானு வேலாய் இருக்கிறார். எனவே நம் விசுவாசத்தை கட்டியெழுப்பிக் கொண்டு சோர்ந்து போகாமல் எல்லா சந்தர்ப்பத்திலும் அவரையே நோக்கிக் கூப்பிடுவோமாக. அவரே நமக்கு உத்தரவு கொடுத்து நாம் அறியாததும் நமக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை நமக்கு அறிவிப்பார். ஜெபத்தைக் கேட்கும் நம் தேவன் ஜெயம் தந்து உயர்த்துவார். நீங்கள் உயர்த்தப்படுவது உங்களின் ஜெபத்தின் உயர்வைப் பொறுத்ததே. ஆமென். அல்லேலூயா!

## தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

நம் ஜெபம் கேட்கப்படுகிறதா? எனக்கன்பான தேவ ஜனமே! ஜெபம் என்பது தேவனை சந்திக்கும் ஒரு களம். தேவ உறவினை உண்மை என்று நிரூபிப்பது ஜெபமே. நாம் ஜெபிக்க செல்கின்றோம் என்றால் தேவனை சந்திக்க செல்கிறோம். அவரோடு பேசப்போகிறோம். அவருடைய அன்பை ருசிக்கப் போகிறோம். அவருடைய பிரசன்னத்தை உணரப் போகிறோம் என்பது போன்ற உணர்வுகளும் எண்ணங்களும் நமக்கு வேண்டும். "என்னையல்லாமல் உங்களால் 'என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது"" (செய்ய முடியாது) (யோவா 15 ன்றும் செய்யக் கூடாது"" :5) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். ஆகவே நம்மால் எதுவும் செய்ய முடியாது என்ற நமது இயலாமையை ஒப்புக் கொண்டு, இயேசு கிறிஸ்துவோடு ஒரு உறவை உருவாக்கி, அவரோடு ஐக்கியப் படுவதே ஜெபம்.

பரி.பவுல் "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு 'தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்""கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்"" (1 கொரி 1:9) என்று அந்த ஐக்கியத்தைத் தெளிவு படுத்துகிறார். ஜெபத்தின் மூலமாகவே அந்த ஐக்கியத்தை தெளிவு படுத்துகிறார். ஆகவே ஜெபம் நம்முடைய வாழ்க்கையில் உயிர் நாடியாக இருக்கிறது. ஜெபம் இல்லாத வாழ்க்கை, வெறுமையான வீண் வாழ்க்கையே. ஜெபம் பரலோக ஆசீர்வாதங்களை அள்ளித்தருகிறது. தடைகளை தகர்க்கிறது, தோல்விகளை ஜெயமாக்குகிறது, கோணலானவைகளை செவ்வையாக்குகிறது, இருளை வெளிச்சமாக்குகிறது, குறைவுகளை நிறைவாக்குகிறது.

அன்பு தேவ ஜனமே! நம் ஜெபமே முழு உலகத்தையும் அசைக்கக்கூடிய மிகப் பெரிய வல்லமையான ஆயுதமாக உள்ளது. ஆனால் நம் ஜெபத்தை தேவன் கேட்பதற்கு நம்முடைய பகுதியில் நாம் எவ்வித தகுதிகளை உடையவர்களாயிருக்க வேண்டும் என்பதை நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். "நீங்கள் 'நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்"" என்கிறார் (ஏசா1 மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்"" :15). ஆகவே தேவன் நம் ஜெபத்தைக் கேட்க ஆவலாய் இருக்கும்போது நாம் எவ்வித தகுதிகளை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அவற்றை நாம் நிறைவேற்றுவோமாக! வேதத்திலே முக்கியமாக ஐந்து கூட்டத்தாரின் ஜெபத்தை தேவன் கேட்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. 1. திக்கற்றவர்களின் ஜெபத்தை (சங் 102 .

திக்கற்றவர்களின் ஜெபத்தை (சங் 102:16):-நம் தேவன் திக்கற்றவர்களின் தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்கு சகாயர் நீரே! என்று தாவீது கூறுகிறார் (சங்.10:44). "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்"" (யோ.14 உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்"" :18) என்றே நமக்கு வாக்குரைத்துள்ளார். எல்லோராலும் கைவிடப்பட்டு, திசையறியாமல், தயங்கி நிற்கும் மக்களுடைய ஜெபத்தை கர்த்தர் கவனித்துக் கேட்கிறவராய் இருக்கிறார். எனக்கு உதவி செய்யவும், ஒத்தாசைப் பண்ணவும் யாருமே இல்லையே என்று நீங்கள் இருக்கிறீர்களா? கவலைப் பட்டு கலங்க வேண்டாம் உங்கள் ஜெபத்தை கேட்க உங்களை சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தர் ஆவலாக உள்ளார். ஆகார் தன் குமாரன் இஸ்மவேலோடு தண்ணீரின்றி பெயர்செபாவின் வனாந்தரத்தில் திக்கற்றவர்களாய் அலைந்து திரிந்தபோது, திக்கற்ற அவளுடைய என் தேவனாகிய கர்த்தாவே எனக்குச் சகாயம்பண்ணும்: உமது கிருபையின்படி என்னை இரட்சியும். -சங். 109:26 கூக்குரலின் சத்தத்தைக் கேட்ட தேவன் தண்ணீர் துரவைக்காண செய்து, அவளையும் அவள் குமாரனையும் காப்பாற்றினார். அதே தேவன் இன்றைக்கு நம் எல்லோருக்கும் ஒத்தாசை செய்கிற சமயத்திற்கேற்ற சகாயர்.

2. நீதிமான்களின் ஜெபத்தை (நீதி 15 . நீதிமான்களின் ஜெபத்தை (நீதி 15:29):- நீதிமான்களின் ஜெபத்தையோ கர்த்தர் கேட்கிறார். "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய 'கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது"" (சங். 34 அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது"" :15). யாக்கோபு அப்போஸ்தலனும் நீதிமானின் வேண்டுதலை பற்றி கூறும்போது "நீதிமான் செய்யும் 'நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கிறது"' (யாக். 5 க்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கிறது"' :16) என்றே கூறுகிறார். நம் தேவன் நீதிமான்களின் ஜெபத்தைக் கவனித்துக் கேட்கிறவராயிருக்கிறார். "நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு அவர்களை அவர்களுடைய எல்லா 'நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்"" (சங். 34 பத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்"" :17). தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை தப்புவித்து கொண்ட நோவா, தானியேல், யோபு என்ற மூன்று நீதிமான்களை குறித்து எசே. 14:14, 18, 20-ல் வாசிக்கிறோம். நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானாயிருந்தபடியால் அவன் விண்ணப்பத்தைக் கேட்டு தேவன் அவனையும் அவன் குடும்பத்தாரையும் ஜலப்பிரளயத்தினால் அழிந்து போகாதபடி காப்பாற்றினார் அல்லவா. தானியேல் எந்த ஒரு நீதிகேடும் செய்யாத நீதிமானயிருந்தபடியால் சிங்கங்கள் சேதப்படுத்தாதபடி தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயை கட்டி போட்டாரல்லவா. யோபு ஒரு நீதிமானாய் இருந்தபடியால் எல்லாவற்றையும் இழந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டபோதும் கர்த்தர் அவன் விண்ணப்பத்தைக் கேட்டு அவன் சிறையிருப்பை மாற்றினார் அல்லவா. அதே தேவன் நம்மையும் அழிவிலிருந்து காக்க, சோதனையினின்று தப்புவிக்க, சாத்தானின் தாக்குதலினின்று விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

3. செம்மையானவர்களின் சம்மையானவர்களின் ஜெபத்தை (நீதி 15:8):- கர்த்தருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது (சங்.11:7). "செம்மையான இருதயம் உள்ளவர்களை இரட்சிக்கிற 'செம்மையான இருதயம் உள்ளவர்களை இரட்சிக்கிற தேவன்"" (சங்.7 தவன்"" :10). செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சத்தை உதிக்கச் செய்கிற தேவனே நம் தேவன் (சங் 112:4). அன்பு தேவ ஜனமே! நாம் நம் வார்த்தையில், செய்கையில், இருதயத்தில், சுபாவங்களில் செம்மையானவர்களாயிருந்தால் தேவன் நம் ஜெபத்தைக் கேட்பது நிச்சயம். வேதத்தில் நாம் எசேக்கியா ராஜாவைக் குறித்து பார்க்கும்போது "அவன் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான்"" என்று 'அவன் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான்"" அவனை குறித்து வாசிக்கிறோம் (2இரா 18:2, 2நாளா 29:2). ஆகையால் அவனுக்கு மரணத்துக்கேதுவான வியாதி வந்தபோதிலும் அவன் விண்ணப்பத்தை கேட்ட தேவன் அவனுடைய ஆயுசு நாட்களில் 15 வருடத்தைக் கூட்டி கொடுத்தார் (1 இரா 20:3-6). மற்றொரு சந்தர்ப்பத்தில் அவன் கிருபையுள்ள கர்த்தர் ஜனங்களை மன்னித்து அனுகூலம் செய்யும்படி விண்ணப்பம் செய்கிறபோது கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு ஜனங்களுக்கு அனுகூலம் செய்தார் என்று கூறப்பட்டுள்ளது (2நாளா 30:20).

அன்பு தேவ ஜனமே! நாம் செம்மையானவர்களாயிருந்தால், நாம் கூப்பிடும் வேளைகளில் எல்லாம் நம் தேவன் நம் விண்ணப்பத்தைக் கேட்டு நம் இருதயத்தின் வேண்டுதல்களை எல்லாம் நமக்கு அருள் செய்வார். மட்டுமல்ல நம் விண்ணபத்தைக் கேட்டு பிறருக்கும் 6 அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார்: -சங். 110:6 செம்மையாய் ஜீவித்த எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்ட அதே தேவன் நம் தேவனல்லவா? செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ? (மீகா- 2:7) என்று நம் தேவன் கேட்கிறார். செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும் என்ற வசனத்தின்படி நம் வம்சமும் ஆசீர்வதிக்கப்படும்.

(தேவ செய்தியின் தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

# 'நம்பிக்கையின் புகழிடம்'– "நம் இயேசு"

முப்புரிநூல்

நாம்

இயேசு

நம்பிக்கை



வனாந்திரமான நம் வாழ்வின்
குளிர்ச்சியான நீரேடையயே;
நீங்கள் மட்டும் தானப்பா!

வழி தெரியாமல், தவித்து நின்ற போது
நானே வழியும், சத்தியம் என்று கூறி;
எங்கள் ஜீவனை மீட்டவர்
நம்ம இயேசு ராஜா ஒருவரே!

போராட்டங்களும், பிரச்சனைகளும் நம்மை சூழ
மேடு என்று நினைத்து ஏறினோம்;
ஆனால், சறுக்கி விழுந்தோம்
கண் இமைக்கும் நேரத்தில்;
உம் அன்புக் கரங்கள், எம்மை தூக்கி நிறுத்தியது;
அறியாமல் செய்யும் எம் தவறையும் மன்னித்து,
உம் பாசக் கயிற்றினால் கட்டி;

எம்மை அரவணைப்பவர் நீர் மட்டும் தானே!
உலக மக்கள், தூற்றித் திரிகின்ற வேளை,
தாங்க முடியா துயரத்தில் மூழ்கிய நேரம்;
எங்களைத் தேடி வந்து நேசிப்பவரே!

பணமும், இச்சை மடடுமே சுக வாழ்வு தரும்
என்ற மனிதர்களின் மாய்மாலமான அன்பினால்;
கண்ணீர் சிந்திய நேரத்தில்,
எங்கள் கண்ணீரை துடைத்து; ஆறுதல் செய்பவர்;
இவ்வுலகில் எவருமில்லையே!

உற்றார், சுற்றத்தார் கைவிட்டாலும்,
உம் அன்பு ஒன்றே எமக்கு போதும்;
எம் ஊழிய பாதையில், பாடுகளினால் சிக்கித் தவித்தாலும்,
நீதிமானுக்கென்று ஜீவ கிரீடத்தை:
தருபவர் நீர்தானயா!

எங்கள் வாழ்வின் தாயாக! அன்புத் தகப்பனாக!
உற்ற நண்பராக! "எல்லாம் நீர் மட்டுமே"
எம் வாழ்வை சிறப்பிக்க வந்த 'நம்பிகையின் புகழிடமே'!

உமக்கு எங்கள் வாழ்நாள் முழுவதும் நன்றி சொல்லி,
எம்மால் இயன்ற உம் பணியை நாங்கள் தொடர;
உம் ஆசீர்வாதங்கள் என்றென்றும்,சதாகாலங்களிலும்;
எங்கள் அனைவரோடும் இருப்பதாக!

( தொடர்ச்சி 14 ஆம் பக்கம்)

# மிஷனரி செய்திகள்

நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டாத படிக்கு கிறிஸ்து வினுடைய நாமம் சொல்லப்படிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன். ரோமர் –15:21

என்னுடைய பெயர் P.T. கிறிஸ்டோபர், Tamil Village Gospel Misson (TVGM) –– ஸ்தாபகராக உள்ளேன். சொந்த ஊர் நெல்லை மாவட்டத்திலுள்ள மரக்காட்டுவிளை கிராமம் ஆகும். எங்கள் சி.எஸ்.ஐ ஆலயத்தில் ஐந்து பேர் உள்ள சபையில் பிரசங்கித்த வசனமாவது "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான். மத்தேயு –16:26 "மதிகேடனே உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும். லூக்கா 12:20. என்ற வசனமே

கர்த்தருக்கு ஊழியம் செய்ய என்னை உந்தின வசனங்களாகும். கர்த்தருடைய கிருபையினால் இப்பொழுது திருச்சியில் TVGM தலைமை அலுவலகம் அமைத்து செயல்பட்டு வருகிறோம்.

என்னுடைய PUC, BSC படிப்பை, (நாசரேத், சாயர்புரம், லெட்சுமி புரம் கல்லூரி) யில் முடித்து 1973 ஆம் ஆண்டு மதுரையில் ஒரு பெட்ரோல் பங்கில் ஒரு நாளைக்கு ரூ.3 சம்பளத்திலும், பின்பு ஒரு ஹோட்டலில் 3 வேலை சாப்பாட்டிற்காக மட்டும் வேலை செய்தேன். விடுமுறைக்கு வத்தலகுண்டு அருகிலுள்ள கெங்குவார்பட்டி கிராமத்தில் தங்கியிருந்த பொழுது, அந்தக் கிராமத்தில் 2000 குடும்பங்கள், 16 வகை ஜாதி மக்கள் இருப்பதாகவும், ஒரு கிறிஸ்துவ குடும்பம் கூட இல்லை என்ற நிலையை உறவினர் மூலம் அறிந்தேன். படிப்பு குறைவான ஊழியர்கள் ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள் கிறிஸ்தவ வீடுகளை சந்தித்து, ஜெபித்து, காணிக்கை பெற்று செல்வதையும் பார்த்தேன்.

இப்படிப்பட்டவர்களுக்கு பொருளுதவி செய்து, ஆலயமில்லாத கிராமத்தில் விசுவாச ஜெபவீடு உருவாக்க ஊக்குவிக்க வேண்டும் என என் உள்ளத்தில் உதயமானது.7–5–1973 என்னுடைய 22வது பிறந்த நாளில், செய்த பொருத்தனையாவது, கர்த்தர் ஒரு நல்ல வேலை தந்தால் மாதம் ரூ.100 கொடுத்து ஒரு ஊழியரை கெங்குவார் பட்டி கிராமத்தில் தாங்க வேண்டும் என்பதாகும். 1975 ஜனவரி முதல் 1978 வரை நாசரேத் பெத்தேல் சிறுவர் இல்லத்தில் வார்டனாக பணிபுரிய கர்த்தர் கிருபை புரிந்தார். ஆனாலும் ஆலயமில்லாத கிராமத்தில் ஊழியம் செய்ய

ஒருவரும் முன்வரவில்லை. ஆதலால் நானே ஒரு மிஷினெரியாக செல்லவேண்டுமென்று என்னை அர்ப்பணித்தேன். சேலம் டேனிஷ்பேட்டை 'பெத்தேல்' வேதாகம பள்ளிக்கு மிஷனெரி பயிற்சிக்காக அனுப்பினார்கள். மாரண்டஹள்ளி என்ற மலைப்பகுதியில் நடைபெற்ற ஒரு திருமணத்திற்க்கு பாடல் பாடுவதற்காக எங்களை அழைத்து சென்றார்கள். கிறிஸ்தவ திருமணம் ஆனால் இந்து கோவிலில் நடைபெற்றது. அங்கு உட்கார்ந்து, 'மகிழ்வோம்' என்ற பாடலை பாடியபோது, எனக்குள் திருநெல்வேலி மாவட்டம் 'செம்பொன்விளை' என்ற என் ஊர் அருகிலுள்ள கிராமத்தில் 56 இந்துக்குடும்பங்கள் உள்ளது ஞாபகதிற்க்கு வந்தது. இந்த கிராமத்திலும் சுவிசேஷம் முழங்க வேண்டும் என்ற வாஞ்சை ஏற்ப்பட்டது. இதற்காக ஜெபித்தபொழுது சகோ.காட்சன் ரூ.5 காணிக்கை தந்தார்கள். 1978 டிசம்பர் 25–ம் தேதி 56 குடும்பங்களுக்கும், புதிய ஏற்பாடு, கிறிஸ்மஸ் கேக் வீடு வீடாக கொடுத்து ஜெபிக்க கர்த்தர் கிருபை செய்தார்.

'செம்பொன்விளை கிறிஸ்துவுக்கே'– என்ற பெயரில் 1979 ஜனவரி இந்த ஊழியம் ஆரம்பமானது. எனக்கு நாசரேத் இல்லத்தில் தலைமை வார்டனாக இருந்த திரு. துரைராஜ் அவர்கள் முதல் ஊழியராக நியமனம் செய்யப்பட்டார்கள்.

இப்படியிருக்கும் பொழுது, தமிழ் நாட்டில் 1500 கிராமங்களில் ஆலயம் இல்லை, என்ற பிரசங்கத்தை கேட்ட என்னுடைய நண்பர் திரு. பொன்ராஜ் என்னைப்பார்த்து ஒரு கிராம ஊழியத்தை பிரஸ்தாபப்படுத்தி ஊழியம் செய்கிறீர்களே, " தமிழ் நாட்டிலுள்ள 1500 கிராமங்களுக்கு ஏதாவது செய்ய கூடாத" என்று என்னைப்பார்த்து கிண்டலாக கேட்டார். இந்தக் கேள்வி தான் என்னை சிந்திக்க வைத்தது. 1500 கிராமம் அல்ல, 400 யூனியன்களில் 40,000க்கும் அதிகமான குக்கிராமங்களில் எந்தவித ஜெபவீடும் இல்லை என்பதை பின்வரும் நாட்களில் கண்டுபிடித்தேன்.

அதலால் "வீட்டிற்கு ஒரு சுவிசேஷம்" ––– "ஊருக்கு ஒரு விசுவாசியாவது" உருவாக்க வேண்டும் என்ற வாஞ்சை ஏற்பட்டு 1979 ஏப்ரல் 29 அன்று Tamil Village Gospel Mission (TVGM) என்ற இயக்கத்தை விசுவாசத்தினால் உருவாக்க கர்த்தரே உதவி செய்தார், பாஸ்டர் ஜோசப் முதல் காணிக்கையாக ரூ.5 கொடுத்தார்கள்.

1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் தேதி, ஒரு மாதத்தில் ஏதாவது ஒரு வாரத்திற்குள் 1 யூனியனில் "100 கிராமங்களுக்கு" வீடுவீடாக சென்று சுவிசேஷம் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை விசுவாசத்தினால் ஆரம்பிக்க கர்த்தர் கிருபை செய்தார்.

(விவரத்தின் முயற்சி சகோ. எபிநேசர் )

# ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வன். ஜோசப் அருள்செல்வன் தர்மர்
செல்வி. ஷாலோம் கிரேஸ்
செல்வி. கீதா கொம்மையன்
சகோ.சுஜின் ஹெக்கில்
செல்வன். சாலமோன் இம்மானுவேல்
சகோதரி. லின் டிஃப்னி ஜெபசிங்
சகோதரி. ஜீவரத்தினம் மகேஷ்ராஜ்
சகோ. ஸ்டாலின் சுனில் வின்ஸ்
செல்வன். ஜீவன் ஆஷ்வா பிரசாத்
செல்வன். ஜோஸ்வா ராமர்
சகோ. வர்கீஸ்
செல்வி. ரியா பிரிட்டி
செல்வன். ஆதித் சிங் சுபின் சிங்
செல்வி. வைதேகி கலிய மூர்த்தி
செல்வி. லின்டா வில்கின்சன்
செல்வன். ஹனீஷ் தினேஷ்குமார்
செல்வி. பிரியங்கா சதீஷ்குமார்

சகோதரி. தமிழ்செல்வி ஞானசேகர்
சகோ. மார்க் ஆன்டனி
செல்வன். ஆத்ரியல் ஆதான் ராஜேஷ்
சகோதரி. அனிஷா ஆல்வின்
செல்வி. ஆரோலினா விஜயன்
செல்வன். ரோஷன் அசோக்குமார்
சகோதரி. ஆஷா பாலகிருஷ்ணன்
சகோ. ஜெயக்குமார் ஞானதாஸ்
சகோ. ராஜேஷ் C.R
சகோ. தம்புகுமார் டென்னிஸ்
சகோ. வில்கின்ஸ் தினகரன்
சகோதரி. ஜெபராணி விபின்
செல்வன். தினேஷ் அருள்மணி
செல்வன். எபின் கேட்சில் ஜெயக்குமார்
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி. பியூலா மெர்ஸ்சி ஜெகநாதன்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்(ஆதி .22:18)

திருமதி & திரு. குமாரசாமி

திருமதி & திரு. ஜெபராணி விபின்

திருமதி & திரு. ஜான் கெட்சன்

திருமதி & திரு. செங்குட்டுவன்

**என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.** (யோவேல் 2:26)

11

# 2021 அக்டோபர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 6:30 முதல் இரவு 8:00வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| .02/10/2021 | சகோ. அந்தோணி | சகோ. ஆரோக்கியதாஸ் |
| .10/10/2021 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ.எபிநேசர் |
| .17/10/2021 | சகோ. ஜான் கெட்சன் | சகோ. கிருஸ்டோபர் GTC |
| .24/10/20211 | சகோ. டேவிட் | சுகோ. கென்சிங் |
| .31/10/2021 | சகோ. வேலுராமர் | சகோ.தாமஸ் |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 10 முதல் 12 வரை மாலை 3:00 முதல் 5:00

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| .01/10/2021 | சகோ. சுகுமாரன் | சகோ. ஸ்டாலின் |
| .08/10/2021 | சகோ. ஐசக்துரை | சகோ. ஜெகநாதன் |
| .15/10/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| .21/10/2021 | சபையின் வாலிபர்கள் ஆராதனை | |
| .28/10/2021 | சகோ. வில்ஸன் | சகோ. ஐசக்துரை |

**14/10/2021 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**22/10/2021 அன்று சபையின் பொதுமன்றம்**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – நண்பகல் 12:00 முதல் 1:30 மணிவரை

**28/10/2021 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

(இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம்– வெள்ளிகிழமை காலை ஆராதனைக்கு பின் )

**30/10/2021 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை
(வேத வினா உபாகமம் பகுதி )

15 வயதிற்கு கீழுள்ள சபையின் பிள்ளைகளுக்கு நமது சபை வீட்டில் வைத்து அனைத்து வெள்ளிகிழமைகளிலும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெற்றோர்களுடன் ஆராதனையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்லவும், ஞாயிறு ஆராதனை தற்சமயம் சபை வீட்டில் வைத்த மாலை 6:30 :மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது செவ்வாய் கிழமைகளில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் மாலை 6:30 மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது அனைவரும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லவும் ( சபையின் அனைத்து ஆராதனையிலும் தவறாமல் கலந்து கொள்ளவும்)

# 2021 அக்டோபர் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்



1. அலங்கம் எத்தனை நாட்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டது?
2. எஸ்றா எந்த காரணத்திற்காக உபவாசத்தைக் கூறினான்?
3. மொர்தெகாய் எஸ்தருக்கு திரும்பவும் சொல்லச் சொன்னது என்ன?
4. உன்னை எகிப்திலிருந்து கொண்டு வந்த தெய்வம் இதுவென்று எதை குறிப்பிட்டார்கள்?
5. எஸ்தருக்கு எதினால் யேகாயின் கண்களில் தயை கிடைத்தது?
6. மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவித்தவர்கள் யார்?
7. எதனால் இஸ்ரவேலின் மேலிருந்த குற்றத்தை அதிகரிக்கப்பண்ணினார்கள்?
8. எஸ்தர் ராஜாவுக்கு எத்தனை முறை விருந்து வைத்தாள்?
9. எஸ்றா சகல ஜனங்களுக்கு முன்பாக புஸ்தகத்தை திறந்தபோது ஜனங்கள் என்ன செய்தார்கள்?
10. கர்த்தருடைய ஆலயத்திற்காக கோரேஸ் ராஜா கொடுத்த ஆலய பணிமுட்டுகள் எத்தனை?
11. மறு ஜாதியான ஸ்திரீகளால் பாவம் செய்தவன் யார்?
12. சூசான் அரண்மனையில் நடந்த விருந்தில் எதினால் பானம் கொடுக்கப்பட்டது?
13. ஆட்டு வாசலை கட்டியது யார்?
14. ஆமான் மொர்தெகாயை விரோதித்ததற்குண்டான காரணம் என்ன?
15. எருசலேமிலுள்ள தேவனுடை ஆலயத்தின் அஸ்திபாரத்தை போட்டது யார்?

**விடைகளை வருகின்ற 20-10-2021க்குள்(whatsApps #66015503) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் நெகே 1,3, 6,8,9,13 எஸ்தர் 1,2,3,4,7 எஸ்றா 5,8,10 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்**

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2021 –செப்டம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1. நீதிமானுடைய நீதி – நீதி மொழிகள் 15:19
2. பரஸ்திரியின் பாதை நீதி மொழிகள் 2:18
3. நீதி மொழிகள் –21:2
4. கர்த்தர் நீதி மொழிகள் –16:2
5. உத்தமன் நீதி மொழிகள் –16:32
6.பரஸ்திரியின் – நீதி மொழிகள் –7:27
7. வேசியின் அடையாள பரணந்தரித்த தந்திரமுள்ள ஒரு ஸ்திரி – நீதி மொழிகள் –7:20
8. ஆக்கிணைகுள்ளாவான் –நீதி மொழிகள் 19:19
9. சோம்பேரி –நீதி மொழிகள் 22:13
10. நிதிமான் – நீதி மொழிகள் 28:1
11. நீதி மொழிகள் 6:3
12. நீதி மொழிகள் 27:23
13. பரிதாணம் –நீதி மொழிகள் 21:14
14. நீதி மொழிகள் 16:20
15. சாலொமோன் – நீதி மொழிகள் 12:20

## 2021 செப்டம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| Sis. சுகந்தி தம்பு குமார் | Sis. நித்யா ஜோன்ஸ் |
| Sis. வனிதா காளிமுத்து | Sis. ஷீபா அருண் இம்மானுவேல் |
| Sis. ஹெலன் ஷீஜா ராபின் | Sis. தயா இயேசுரெத்தினம் |
| Sis. நகோமி ஜான்ஸன் | Sis. பியூலா மொர்ஸி பால் |
| Sis. எழிலரசி டேனியல் | Selvi. வின்ஸி டேவிட் |
| Sis. லதா கிருஸ்டோபர் | Selvan. அமீஷ் டேவிட் |
| Sis. செலின்டேவிட் | Bro. ஜான்ஸன் |
| Sis. அனிதா தாஸ் | |

........உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்.. *ஆதியாகமம் 12:7*

இவ்வுலகில் சாதிக்கப் பிறந்த நாம்;
நம் நம்பிக்கை யார் மேலே உள்ளது?
சிந்தித்து; செயல்படு!

உங்கள் வேதனை நீங்கி;
பின், சாதனையாளராக வெற்றி நடைபோடு!

அன்பு சகோதரி
A.பியூலா மெர்லி பால்.

## விலையேறப் பெற்றவன்

கற்றுக் கொண்டேன் உம்மிடத்தில் அன்பு எனும் பாடம்
உன் தரிசனமே வாழ்க்கையாகி போனது என் நேரம்

நடுக்கடலில் அசைவாடும் உன் அழகுக் காட்சி
என் மனக் கண்ணில் பார்த்து
தினம் சொல்லுகிறேன் சாட்சி

செங்கடலை நீர் பிளந்து
சிறை வாழ்வை தகர்த்தீர்–அதை
செந்தமிழல் பாடிடவே மெய்
சிலிர்த்துப் போய் நின்றேன்

நிலையில்லா இவ்வாழ்வில்
விலையில்லா உம் இரத்தம் தந்து
சிலையான என் இதயத்தை உம்
சிலுவையால் தொட்டீரே

ஆசையாய் காத்திருந்தேன்
அதிகாலையில் உனை காண
விலையேறப் பெற்றவனே
வந்துவிட்டேன் என்றீரே

உனக்காக நான் வாழும்
ஒரு காலம் போதும்
தேகம் மண்ணோடு மறைந்தாலும்
மறவேன் உன் வேதம்.

அன்பு சகோதரி
வனிதா காளி முத்து

# Praise The Lord

நமது ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்த்துவின் நாமத்தில் ஒவ்வொரு சகோதர சகோதரிகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

இன்று நாம் "மாயை" என்கிற தலைப்பிலே கர்த்தருடைய வசனத்தை தியானிக்க ஆண்டவர் தாமே நமக்கு கிருபை புரிவாராக.

மாயை,மாயை எல்லாம் மாயை" என்று பிரசங்கி சொல்லுகிறான் என்று "பிரசங்கி–1:2" மற்றும் "பிரசங்கி–12:8"–ல் வாசிக்கிறோம். ஆம், நாம் உலக வாழ்க்கையிலே, கண்களினால் காண்கிற அனைத்து காரியங்களும் மாயையே என்பதை அறிய முடிகிறது.

"பிரசங்கி 2ம்" அதிகாரம் முழுவதையும் பார்க்கும் போது, பெரிய வேலைகளைச் செய்து, வீடுகளைக் கட்டி, திராட்சத் தோட்டங்களை நாட்டி, தோட்டங்களையும், சிங்கார வனங்களையும் உண்டாக்கி, சகலவித கனிவிருட்சங்களையும் நாட்டி, குளங்களை உண்டுபண்ணி, வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் சம்பாதித்து, எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் திரண்ட ஆஸ்திகளும், பெரியவனும், ஞானசம்பன்னனுமாய் இருந்தும், தான்பட்ட அனைத்து பிரயாசத்தின் பலனையும், அனுபவிப்பதைப் பார்க்கிலும் ஒரு நன்மையும் இல்லை, "இதோ எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருந்தது, சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை" என்று சொல்வதை நாம் பார்க்க முடிகிறது.

பிரசங்கி 11:10 ல் இளமையைக் குறித்து "இளவயதும் வாலிபமும் மாயையே", என்று கூறுவதைக் காணலாம். ஏனென்றால் வாலிப பிராயத்திலே நாம் அநேக தவறுகளைக் செய்து விடுகிறோம். கண்கள் இச்சிக்கிற காரியங்களைச் செய்து, கால் போகிற போக்கில் நடந்து, மாயையான உலக வாழ்க்கையில் சிக்கிக் கொள்கிறோம். ஆனால், பாவ வாழ்க்கையான அவைகளெல்லாவற்றின் நிமித்தம் தேவன் நம்மை நியாயத்தில் கொண்டு வந்து நிறுத்துவார் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

கர்த்தருக்கு பரியமான சகோதர சகோதரிகளே நம்முடைய இருதயங்களிலிருந்து சஞ்சலத்தையும், மாம்சத்திலிருந்து தீங்கையும் எடுத்துப் போட்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காக மரித்த அந்த கல்வாரி சிலுவையை நோக்கிப் பார்க்க வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களைக் கழுவி நம்மைத் தூய்மையாக்குவதற்கு

வாஞ்சையுமள்ளவராக இருக்கிறார். நம்முடைய பாவங்கள் இரத்தாம்பரம் போல் சிவப்பாய் இருந்தாலும் பஞ்சைப் போல் வெண்மையாக மாற்ற அவர் வல்லமையுள்ளவராக இருக்கிறார். தேவனுக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கும் போது, எல்லாத் தீமைகளிலிருந்தும் அவர் நம்மைக் காத்து கொள்வார்.

யோபுவினுடைய சரித்திரத்தை நாம் படிக்கும் போது, அவன் உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல் பூமியில் ஒருவனுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் திரண்ட ஆஸ்திகளை உடையவனாய், கிழக்கத்தி புத்திரர் எல்லாரிலும் பெரியவனாய் இருந்தான் என்று பார்க்கிறோம். அவன் தன்னுடைய நாட்களை, "யோபு 7:16" ல் வாசிக்கும் போது, "என் நாட்கள் மாயை தானே" என்று கூறுவதைப் பார்க்க முடிகிறது.

எனவே நாம் மாயையான உலகில் அழிந்து போகிற நம்முடைய வாழ்நாட்களை அழியாத நித்தியத்திற்க்காக மாத்திரம் செலவழித்து வாழும்போது, கெர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல யாரை விழுங்கலாமென்று வகைத் தேடி சுற்றித் திரிகிற எதிராளியாகிய பிசாசின் கையிலிருந்தும் நம்மைத் தப்புவித்து, அமர்ந்த தண்ணீர்களண்டையிலே நம்மைக் கொண்டு போய் விடுகிற நல்ல மேய்ப்பனாய் நம்முடைய கர்த்தர் இருப்பார்.

சங்கீதக் காரனாகிய தாவீது, சங்கீதம் 119:37ல் தேவனாகிய கர்த்தரிடத்தில், மாயையை பாராதபடிக்கு என்னுடைய கண்களை விலக்கி, உம்முடைய வழிகளில் என்னை உயிர்ப்பியும் என்று சொல்வதைப் பார்க்கிறோம். சங்கீதம் 39:5,11-ல் பார்க்கும் போது "எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம்" என்று கூறுவதைப் பார்க்கலாம்.

கர்த்தருக்கு பரியமான சகோதர, சகோதரிகளே நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ஆத்துமாக்களை "மாயைக்கு" ஒப்பு கொடுக்காமல், பரிசுத்தமாய் வாழும் போது, நாம் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் வாசம் பண்ணவும், அதில் நிலைத்திருக்கவும் ஆண்டவர் நமக்கு கிருபை புரிவார். நாம் ஒவ்வொருவரும் மாயையான பாவ இச்சைகளிலே விழுந்து விடாமல், நம்முடைய ஆவீ, ஆத்துமா, சரீரங்களைக் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக் கொண்டு, நாம் காணாத நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்த்து "மேகங்களுடனே வருகிறதை நம்முடைய கண்கள் காணும்படி பொறுமையோடே 'ஆயத்தம்" என்னும் பாதரட்சையை அணிந்தவர்களாக, கர்த்தருக்காக காத்திருப்போம்". "தெளிந்த புத்தியுள்ளவர்களாய் விழித்திருப்போம்".

தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

வாலிபம் இயேசுவுக்காக

## சகோதரிகள் பகுதி

கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமைப்படுவதாக கர்த்தருக்குள் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே இந்த செய்தியின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி கர்த்தருடைய நாமம் மாட்சிமை அடைவதாக.

எபிரேயர் 10:25–ல் சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசெல்லக்கடவோம் நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்.

நாம் வாழ்கின்ற இந்த உலகத்திலே முதன் முதலாக சபை ஐக்கியத்தை உருவாக்கினவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே அப்போஸ்தலனாகிய பேதுருவைப் பார்த்து "இந்த கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் என்று வாக்களித்த தேவன்" இன்றும் தம்முடைய சபையை தொடர்ந்து கட்டுகிறார். சபைதான் சத்துருவின் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வரப் போகிறது. சபைகள்தான் கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக மாறப் போகிறது, சபையாக கூடி நாம் ஆராதிக்கும் போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோக சேனைகளோடு கடந்து வருகிறார். நம்முடைய ஆராதனைகளில் தேவ தூதர்களும் கலந்து கொண்டு நாம் பாடும் பாடல்களை அவர்களும் நம்மோடு சேர்ந்து ஆராதனை செய்கிறார்கள் அந்த தருணம் எவ்வளவு இன்பமானது பரலோக சேனைகளோடு தேவனை ஆராதிப்பது.

சபை என்பது கட்டிடத்தையோ அல்லது நான்கு சுவர்களையே குறிப்பிடாமல் விசுவாசிகள் ஐக்கியத்தோடு தேவனை ஆராதிப்பதையே குறிப்பிடப்படுகிறது. தேவனுடைய பிள்ளைாகிய நாம் ஒற்றுமையோடும் ஒரே மனதோடும் ஒரே சிந்தையோடும் தேவனை ஆராதிப்பதை தேவனாகிய கர்த்தர் விரும்புகிறார். சபை ஐக்கியம் இல்லாமல் பரிசுத்தமாகவும், ஆவிக்குரிய வளர்ச்சியிலும் இரட்ச்சிக்கப்படவும் முடியாது. இந்த மூன்று காரியங்களும் நமக்கு வேண்டும்மென்றால் சபைக்கு வர வேண்டும்.

அப்போஸ்த்தலர் 2:47 கடைசிபகுதியில் இரட்ச்சிக்கப்படுகிறவர்–களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்து கொண்டு வந்தார் என்று எழுதப்பட்டு இருக்கிறது. அதாவது "இரட்சிக்கபட்டவர்கள்" என்று எழுதப்படாமல் இரட்சிக்கபடுகிறவர் என்று எழுதப்படடிருக்கிறது, வெளியே தனியாக ஜெபிப்பதால் ஒரு மனிதனுக்கு இரட்சிப்பு கிடைப்பதில்லை. சபை ஐக்கியத்தில் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து நாவினால் பாவ அறிக்கை

செய்து ஞானஸ்நானம் எடுக்கும் போது இரட்சிப்பு உண்டாகும் (1 பேதுரு 3:21)

இரட்சிக்கப்படவும் தேவசாயல் அடைய வேண்டுமானால் சபை ஐக்கியம் தேவை தேவ ஜனங்கள் ஒற்றுமையாக இருப்பது சாத்தானுக்குப் பிடிப்பதில்லை. அவன் அதை விரும்புவதும் இல்லை. ஆகவே தான் அவன் சபைகளின் குழப்பத்தை வருவிப்பான், ஏதாவது ஒரு காரணத்தை காட்டி விசுவாசிகளை பிரிக்க பார்க்கிறான். அனைத்து சபைகளிலும் ஏதாவது ஒருவகையான குறைப்பாடுகள் இருக்கதான் செய்யும். இதைப் பார்போர்கள் ஒழுங்காக சபைக்கு வருவதும் இல்லை, ஆவிக்குரிய ஜீவிதத்தில் வளர்ச்சி அடைய போகிறதும் இல்லை. குறைகளை கண்டுபிடிப்பது சாத்தானின் பணி அதை நாம் செய்யாமல் பகை, விரோதங்கள் எதையும் சபையில் கொண்டுவராதபடி, அப்படி ஏதோனும் இருப்பினும் கூட அவை எல்லாவற்றையும் மனப்பூர்வமாய் மன்னிப்போம் கிறிஸ்து இயேசு நம் மீது அன்பு செலுத்தினது போல நாமும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவோம். சபை ஐக்கியத்தை நாடுவோம். சபையின் காரியங்களில் கூடுமான வரையில் உற்சாகமாய் கலந்து கொள்வோம்.

1 சாமுவேல் புத்தகத்தில் பார்க்கின்றோம் ஏலியின் குமாரர்கள் சபைக்கு வருகிற ஜனங்களை துன்மார்க்கமாய் நடத்தினார்கள் ஆனாலும் அன்னாள் ஆலயத்தில் வந்து ஜெபிப்பதை நிறுத்தவில்லை (ஏலி) உழியக்காரர் அவளை தவராக புரிந்து கொண்டு காயப்படுத்தின போதும் தேவன் மீது கொண்ட அன்பை அவள் விட்டுவிடவில்லை. நாம் குறைப்பாடுகளை பார்க்காமல், கிறிஸ்துவை சபையில் பார்க்கும் படியாக வருவோம் குறைபாடுகளை பார்க்கிறவன் கிறிஸ்துவை சபையில் பார்பதில்லை, கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரித்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்க்கு தம்மைத்தாமே அதற்க்கு ஒப்புக்கொடுத்தார் (எபேசியர் 5:27).

சங்கீதம் 122:1 ல் சொல்லுகிற படி கர்த்தருடைய ஆலயத்திற்க்குப் போவோம் வாருங்கள் என்று சொல்லும் போது மகிழ்ச்சியோடு வந்து அவரை ஆராதிப்போம். அன்புள்ள இயேசுவே ஒரே சரீரமாக உலகமெங்கும் உம்முடைய திருச்சபையை கட்டுவீராக. ஆமென்.

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரி
சங்கீதா ராஜ்

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

**சகோ. ஜெயசேகர்**

96646444

செயலாளர்

**சகோ. இயேசு ரெத்தினம்**

23924262 - 97545812

பொருளாளர்

**சகோ. ஜெகநாதன்**

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

**சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்**

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

**சகோ. பிரசாத் சுந்தரேசன்**

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only